**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.8/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குகன் | மதம் | : இந்து |
| த/பெ | : சுந்தரமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 39 | கிராமம் | : பாகசாலை |
| தொழில் : | தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**20.01.2026**
**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 1, 3 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி பரிமளா எனது தாயார் என்றால் சரிதான். ராஜகோபால் எனது தாத்தா ஆவார். 2ம் பிரதிவாதி சங்கர், 3ம் பிரதிவாதி செந்தில், 4ம் பிரதிவாதி ராஜா எனது மாமா என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி சித்ரா சங்கரின் மனைவி, 6ம் பிரதிவாதி கவிதா சங்கரின் மகள் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு 2 அட்டவணை சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். ஏன் 2 அட்டவணைகளாக சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் தாந்தோணிபிள்ளையின் பூர்வீக சொத்துக்கள் தனியாகவும் கிரையம் வாங்கிய சொத்துக்கள் தனியாகவும் காட்டப்பட்டுள்ளது. நடேச பிள்ளைக்கும் கன்னியம்மாளுக்கும் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மொத்தம் 7 பேர். 1. சுப்பிரமணி, 2. தாந்தோணி, 3. ரங்கன், 4. கிருஷ்ணன், 5. பலராமன், 6. ராஜகோபால், 7. மல்லிகா ஆவார்கள்.

2. மேற்படி 7 பேரும் உயிருடன் உள்ளார்களா என்றால் 4 நபர்கள் இல்லை. சுப்பிரமணி, தாந்தோணி, ரங்கன், கிருஷ்ணன் இறந்துவிட்டார்கள். பூர்வீக சொத்துக்களில் பாகம் பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் அவரவர் பாகம் தனித்தனியாக எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. என்ன ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பாகம் பிரிக்கப்பட்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எனது தாயார் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த ஆவணங்களை நான்

பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். A அட்டவணை சொத்தின் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் தாந்தோணிபிள்ளை பெயரில் இருந்தது. B அட்டவணை சொத்தின் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் தாந்தோணிபிள்ளை பெயரில் இருந்தது.

3. தாந்தோணிபிள்ளையின் பெயரில் இருந்த பட்டா எண் தெரியுமா என்றால் 994 ஆகும். என்ன பரிகாரத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் சண்டை போட்டார்கள். சண்டை போட கூடாது என இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள். இது குறித்து குற்றவியல் வழக்கு உள்ளதா என்றால் இதற்கு முன்பு குற்றவியல் வழக்கு உள்ளது. குற்றவியல் வழக்கு தற்போதும் நடைபெற்று வருகிறது என்றால் ஆமாம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)